### கல்லீரல், பித்தப்பை, கணைய நோய்க்கு

# மியாட் மருத்துவமனையில் நவீன அறுவை சிகிச்சை மையம்



மியாட் மருத்துவமனையில் புதிதாக கல்லீரல் – பித்தப்பை –கணைய நவீன சிகிச்சை மையம் தொடக்க விழாவையொட்டி கலந்து கொண்ட நோயாளியுடன், மருத்துவமனை தலைவர் மல்லிகா மோகன்தாஸ், நிர்வாக இயக்குனர் டாக்டர் பி.வி.ஏ.மோகன்தாஸ், இணை நிர்வாக இயக்குனர் டாக்டர் பிருத்வி மோகன்தாஸ், துறை தலைவர் டாக்டர் ஆர்.சுரேந்திரன் உள்பட பலர் உள்ளனர்.

சென்னை, மார்ச்.3-

கல்லீரல் – கணையம் – பித்தப்பை நோய்களை குணப்படுத்தும் வகையில் "ஒருங்கிணைந்த உன்னத சிகிச்சைக்கான அறுவை சிகிச்சை மையம்" மியாட் மருத்துவமனையில் தொடங்கப் பட்டு உள்ளது.

## கல்லீரல்- கணையம்- பித்தப்பை

சென்னை மியாட் மருத்துவமனையில் கல்லீரல் – கணையம் – பித்தப்பை நோய்களை குணப்படுத்துவதற்காக நவீன முறையில் "ஒருங்கிணைந்த உன்னத சிகிச்சைக்கான அறுவை சிகிச்சை மையம்" தொடக்க விழா நடந்தது.

மருத்துவமனை தலைவர் மல்லிகா மோகன்தாஸ், நிர்வாக இயக்குனர் டாக்டர் பி.வி.ஏ.மோகன்தாஸ், இணை நிர்வாக இயக்குனர் டாக்டர் பிருத்வி மோகன்தாஸ், கல்லீரல் – பித்தப்பை- கணைய சிகிச்சை துறை தலைவர் டாக்டர் ஆர்.சுரேந்திரன் ஆகியோர் கூறியதாவது:-

## நவீன சிகிச்சை

மனிதனின் செரிமான அமைப்புகளில் கல்லீரல், பித்தப்பை மற்றும் பித்த நாளங்கள் மற்றும் கணையம் போன்றவைகள் ஒன்றுக்கொன்று நெருங்கிய தொடர்புடையவை. இவற்றில் பாதிப்பு ஏற்படும் நிலையில் கடந்த 30 ஆண்டுகளுக்கு முன்பு வரை உரிய சிகிச்சை இல்லாமல் பலர் இறக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

அதேநேரம் முன்பெல்லாம் கணைய பாதிப்பு ஏற்பட்டவருக்கு சிகிச்சை அளித்தால் உயிருக்கு ஆபத்து ஏற்படும் என்று டாக்டர்களிடையே அச்சம் இருந்தது. ஆனால் தற்போது மருத்துவ அறிவியல் முன்னேற்றம் நவீன மருத்துக் கருவிகளின் வசதி காரணமாக கல்லீரல் மாற்று சிகிச்சை, கணைய அழற்சிக்கு நவீன சிகிச்சை அளித்தல் ஆகியவை இப்போது சாத்தியமாகி உள்ளது.

## இறப்பு விகிதம் இல்லை

மியாட் மருத்துவமனையில் கல்லீரல் – பித்தப்பை– கணைய சிகிச்சை மையத்தில் 22 பேருக்கு கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சை வெற்றிகரமாகச் செய்யப்பட்டுள்ளது. உலக அளவில் கல்லீரல் கணைய பாதிப்புக்குள்ளானவர்களுக்கு சிகிச்சை அளிப்பதால் இறப்பு விகிதம் 5 முதல் 8 சதவிகிதமாக உள்ளது.

ஆனால் மியாட் மருத்துவமனையில் இறப்பு விகிதமே இல்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும். இதற்கு கல்லீரல் சிகிச்சை துறை மட்டுமின்றி, சிகிச்சையின் போது பல்வேறு மருத்துவத் துறைகளின் முழுமையான ஒருங்கிணைப்பும் மற்றும் ஒத்துழைப்பும் காரணமாகும்.

## குடிப்பழக்கம்

கணைய அழற்சி பாதிப்புக்குள்ளானவர்களில் 60 சதவிகிதம் பேர் குடிப்பழக்கம் உள்ளவர்களாகவே இருக்கின்றனர். இதேபோல் ஹெபடைடிஸ் வைரஸ் தாக்குதல் உடல் உழைப்பில்லாமல் கல்லீரலில் கொழுப்புச் சத்து சேருதல் உள்ளிட்டவை காரணமாக கல்லீரல் பாதிப்பு ஏற்படுகிறது. முதுகுவலி, அதிக உடல் சோர்வு ஏற்படுதல் ஆகியவை கல்லீரல்– கணைய பாதிப்பின் முக்கிய அறிகுறிகளாகும்.

எனவே ஆண்டு தோறும் முறையாக உடல் பரிசோதனையைச் செய்து கல்லீரல்– பித்தப்பை– கணைய நோய்களுக்கான அறிகுறியை முன் கூட்டியே தெரிந்து கொண்டு நோயின் தீவிரத்தைத் தடுத்துக் கொள்வது நல்லது.

நோய், ஆரம்ப நிலையிலேயே கண்டறியப்பட்டால் சிகிச்சையில் ஆதாயம் உண்டு என்ற உண்மை நம் மக்களால் கிட்டத்தட்ட புறக்கணிக்கப்படுகிறது. இந்த சேவையின் நோக்கம் இவ்வகையான நோய்களைப் பற்றிய விழிப்புணர்வுகளை பரப்புவதற்காகவும், நோயினால் ஆபத்தான நிலையில் உள்ளவர்கள் மருத்துவ கண்காணிப்பின் மூலம் ஆரம்ப நிலையிலேயே கண்டு பிடித்து மக்களுக்கு உதவுவதேயாகும்.

இவ்வாறு அவர்கள் கூறினர்.

## நோயாளியின் அனுபவம்

கல்லீரல் கணைய பாதிப்புக்குளாகி மியாட் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று முழுமையாக குணமடைந்தவர்கள் தங்கள் நோய்க்கு முறையாக சிகிச்சை பெற்று நோயிலிருந்து விடுதலையானது குறித்த அனுபவங்களை கூறினர்.

நிகழ்ச்சியில் மருத்துவமனை இயக்குனர் டாக்டர் ஜார்ஜ் எம்.சாண்டி, பத்திரிகையாளர் என்.ராம், அவருடைய மனைவி மரியம் ராம் உள்பட பலர் கலந்து கொண்டனர்.